www.Padasalai.Net www.TrbTnpsc.com

திருப்பத்தூர் மாவட்டம்

வகுப்பு : 12 அரையாண்டுத் தேர்வு – 2023 மதிப்பெண்: 90

விடைக்குறிப்பு பொதுத் தமிழ்

பகுதி – 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 14X1=14

1.இ) சிற்பி பாலசுப்பிரமணியன்

2. ஈ) 8

3. அ) தொல்காப்பியம்

4. ஆ) பதிற்றுப்பத்து

5. இ) அஞ்ஞாடி

6. அ) வெண்பா

7. ஈ) நாய்

8. ஆ) 1 சரி 2 சரி

9. இ) தூதுவன்

10. அ) தமிழ்நதி

11. ஈ) கிறித்தவமும் தமிழும்

12. ஆ) கோப்பு

13. இ) காட்சி

14. அ) புதுமைப்பித்தன்

**பகுதி II பிரிவு I**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3X2=6

15. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக.**

☐ 'நடைபெற்றியலும்' என்றும் 'நடை நவின்றொழுகும்' என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

☐ ஆசிரிய நடைத்தே வஞ்சி: ஏனை
வெண்பா நடைத்தே கலி என்றும் சொல்லுகிறது.

☐ நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு தொல்காப்பியத்தில் இடம் பெறுகின்றது.

16. **எதிர்பாராத நிகழ்வுகளை ஜமாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

☐ ஆனந்தம், சோர்வு, அற்பத்தனம் இவை எல்லாம் எதிர்பாராத நிகழ்வுகள்.

☐ இவை எதிர்பாராத, அழையாத விருந்தாளிகள் என்று உருவகப்படுத்துகிறார்.

17. **மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.

18. **அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?**

□ நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற
நூல்கள் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் ஆகும்.

பிரிவு II

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2X2=4

19. **எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

□ சிரிப்பு, அழுகை, சிறுமை(இளிவரல்), வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி என்று மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும்.

20. **பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

□ ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அது கைகூடும்.

□ ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

21. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.

**மதிப்பெண்கள்**
**மனனத்தால்**
**விளைந்ததென்றால்**
**பாடங்கள் எதற்கு?**

பிரிவு III

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7X2=14

22. நானும் என் தங்கையும் எலியும் பூனையும் போல எப்பொழுதும் சண்டையிட்டுக் கொள்வோம்.

23. ஆசிரியருக்குக் கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்..

24. வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

25. பிறருக்கு தின்மை செய்தல் கூடாது என்பதில் திண்மையாக இரு.

26. பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

27. அ) பொலிந்தான் - பொலி + த்(ந்) + த் + ஆன்

பொலி - பகுதி
த்(ந்) - த் சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

ஆ) செய்த – செய் + த் +அ

செய் - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

28. அ) அருங்கானம் -- அருமை + கானம்

விதி 1. ஈறுபோதல்
விதி 2 இனமிகல்

ஆ) ஏழையென – ஏழை + என

இஈஐ வழி யவ்வும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.

29. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் எவற்றிற்கு உதவுகின்றன?

30. முதலறிந்து அகலக்கால் வைக்காமல், தொழில் நடத்துவகே சிறந்தது.

பகுதி III பிரிவு I

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2X4=8

31. **ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கு.**
**இடம்:** தணடி யலங்கார நூலில், 'பொருள் வேற்றுமை அணிக்கு' எடுத்துக்காட்டாக அமைந்த பாடல்வரி ஆகும்.
**பொருள்** : கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின் புற இருளை அகற்றுவது சூரியன் ஆகும்.
**விளக்கம்** : மலையில் பிறந்து நீரால் சூழ்ந்த இவ்வுலக உயிர்களின் அக இருளை போக்குவது தமிழாகும்.பெுற இருளை போக்குவது சூரியன் ஆகும். .ஆனால் தமிழுக்கு ஈடு இணை வேறெதுவும் இல்லை.
32. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

அனைவரையும் சாப்பீட்டீர்களா? எனக் கேட்பேன்.
☐ அனைவரின் முகத்தையும் ஒருமுறை நோக்குவேன்.
☐ வாட்டமிருந்தால் அருகில் அழைத்து, கவலையை போக்குவேன்.
☐ புத்தகம் இல்லாமல் பாடம் நடத்துவேன்.
☐ நான் மாணவன் போலவும் மாணவர்களை ஆசிரியராகவும் மாற்றி பாடம் நடத்துவதை ரசிப்பேன்.
☐ மாணவர்களுடன் விளையாடுவேன்.
☐ அவர்கள் கூறுவதை காது கொடுத்துக்கேட்பேன்.
☐ தேர்வு என்ற பயத்தையும், படிப்பு என்ற பாரத்தையும் கருதாத வண்ணம் கற்பித்தல் செய்வேன்.

33. **இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**
☐ கந்தகோட்டத்துள் எழுந்தருளியுள்ள இறைவனிடம் இராமலிங்க அடிகளார் பின்வருமாறு வேண்டுகிறார்.
☐ மனதை ஒருமுகப்படுத்தி இறைவனின் திருவடிகளை நாளும் தொழுகின்ற, உத்தமர்களின் உறவு வேண்டும் என்று வேண்டுகிறார்.
☐ உள்ளத்தில் ஒன்றும் வெளியில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகரின் உறவு தன்னை பற்றாத வண்ணம் காக்க வேண்டும் என்று கூறுகிறார்.
34. **வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**
☐ வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.
☐ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,
☐ உரிய நேரத்தில் விதைத்தல்,
☐ நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,
☐ அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,
☐ உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் நிர்வாகநெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

பிரிவு II

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2X4=8

35. **மழைவெள்ள பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- பேரிடர்க் காலங்களில் தாங்கக் கூடியவையாக புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.
- நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.
- சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.
- கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.

36. **சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.**

- கழுகு வேந்தன் சடாயு, இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான்.
- இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான். பின் இறந்துவிடுகிறான்.
- தன் தந்தையின் நண்பனாகிய கழுகுவேந்தனை தன் தந்தையாகவே கருதி, ஒரு மகனாக இருந்து இறுதி சடங்கினை செய்கிறார்.
- கண்டவர் வியக்கும்படியான அகில் மரக்கட்டைகளை அடுக்கி. தருப்பை புற்களை பரப்பி, பூக்களைதூவி, மணலால் அழகிய மேடை அமைத்து
- தன் தந்தையாகிய சடாயுவை தன் கரங்களால் தூக்கி சடங்கு செய்யும் மேடையின் மதீ கிடத்தினார்.
- இறுதி சடங்கை மகன் போல இருந்து ஆற்றினார்.

37. **அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?**

- அறிவானது நம்மை ஆபத்திலிருந்து காக்கும் கருவி ஆகும். பகைவராலும் உட்புகுந்து அழிக்க இயலாத அரணாக விளங்குவது அறிவாகும்.
- மனம் போன போக்கில் நம்மை செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி, நல்வழி படுத்துவது அறிவாகும்.
- யார் எதைக் கூறினாலும் அதன் உண்மை பொருளை ஆராய்ந்து பார்ப்பது அறிவாகும்.
- பின்பு வரப்போவதை முன்னரே அறிந்து தன்னை காத்துக்கொள்ளும் அறிவுடையோர்க்கு நடுங்க வரும் துன்பம்மில்லை என வள்ளுவர் அறிவின் மேன்மையை இவ்வாறு விளக்குகிறார்.

38. **'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** எச்.ஏ. கிருட்டிணனார் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் நூலில் இடம் பெற்றுள்ள வரிகள் ஆகும்.

**பொருள் :** தன்னை கட்டும் பொழுது அமைதியாக நின்றதன் காரணம், தன் வலியால் அவர்களுக்கு பாவம்
வந்து சேராமல் இருக்க வேண்டும் என்ற கருணையே ஆகும். அதனால அவர் ஓர் ஏழை போல்
அமைதியான நின்றார்.

**விளக்கம் :** தம் மதீ பகை கொண்டு தனக்கு இழிவான செயல்களைச் செய்த இம்மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களோ என்று எண்ணி
அவர்களுக்காக இரக்கப்படும் தன்மையால், ஏசு ஒரு ஏழைப்போல் அமைதியாக நின்றார்.

## பிரிவு III

**எவையேனும் மூன்றனுக்கு விடை தரு**க. 3X4=12

39. **உவமை அணியை விளக்குக.**

**அணி** : ஒரு பொருளை அல்லது கருத்தை வேறொன்றோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை அணி ஆகும்.

**எ - கா:** உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள
**பாம**் பாடு உடன்உறைந் தற்று

**விளக்கம் :** மனதில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றதாகும்.

**பொருத்தம்** : இக்குறட்பாவில் உடம்பாடு இல்லாதவரை பாம்பிற்கு உவமையாக சுட்டப்பட்டள்ளது. ஆகையால் இதில் உவமை அணி பயின்றுவந்துள்ளது.

www.Padasalai.Net

**அல்லது**

**சொற்பொருள் பின்வரும் நிலையணி**

**அணி:** செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொரு பின்வரும் நிலையணி ஆகும்.

**எ- கா:** எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**விளக்கம்:** எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

**பொருத்தம்:** பொருள் எனும் சொல் மீண்டும் மீண்டும் வந்து கருத்து எனும் ஒரே பொருளைத் தருவதால் இக்குறட்பா சொற்பொருள் பின்வரும் நிலையணிக்குப் பொருத்தமாயிற்று.

40.குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்ற பழமொழிக்கு ஏற்ற வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்.

41. **முன்னுரை:** குமரி மாவட்டம் தேரூரில் சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமிக்கு மகனாகப்பிறந்தார். பக்தி, இலக்கியம், வரலாறு, இயற்கை, வாழ்வியல் போராட்டம், சமூகப்பாடல், தேசியப்பாடல், குழந்தை இலக்கியம் போன்ற எல்லா தளங்களிலும் கவிதைகளை படைத்தளித்துள்ளார். கவிமணி என போற்றுதலுக்குரிய இவர் 'குழந்தை கவிஞர்' என அழைக்கப்படுகிறர். சிறப்புகுரிய இவர் இயற்றிய இப்பாடலின் நயத்தை பின்வருமாறு காண்போமாக.

- **திரண்ட கருத்து:**

**"வாழைக்கு குருத்து அழகு
கவிதைக்கு கருத்து அழகு"**

- **பாடலின் கருத்து:**
- பிறப்பினால் யாருக்கும் பெருமை வந்துவிடாது.
- தங்களுடைய சிறப்பான செய்கையால்தான் பெருமை வரும்.
- நன்மை செய்பவரே உலகின் மேற்குலத்தவர் ஆவார்.
- தீமை செய்பவர்கள் நெருங்கக்கூடாத கீழ் குலத்தவர் ஆவார்.
- **மையக்கருத்து:**

பிறப்பைக்கொண்டு, மேல்குலம் கீழ் குலம் என்று சாதி முறைகளை கூறாதீர். நாம் செய்யும் செயல்கள்தான் நம்மை மேலவர் கீழவர் என மதிக்க வைக்கும் என்று கூறுகிறார்.

- **தொடை நயம்:**

**"தொடையற்ற பாட்டு நடையற்று போகும"**

- **மோனை:**

"முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை"
**பி**றப்பினால - **பெ**ருமை
**சி**றப்பு - **செ**ய்கை
**ந**ன்மை - **நா**டும்
**தி**ன்மை - **தீ**ண்ட
இவ்வாறு சீர் மோனை பயின்று வந்து இப்பாடல் நயமிக்கதாக அமைந்திருக்கிறது.

- **எதுகை:**

"இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை"
பி**ற**ப்பினால - சி**ற**ப்பு
ந**ன்**மை - தி**ன்**மை
இவ்வாறு அடி எதுகை பயின்று வந்து இப்பாடல் நயமிக்கதாக அமைந்திருக்கிறது.

- **இயைபு:**

"இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு"
வாராதப**ப் ா** - வேண்டும**ப்பா**
மேற்குலத்**தார்** - ஒண்ணா**தார்**
இவ்வாறு இயைபு பயின்று வந்து இப்பாடல் நயமிக்கதாக அமைந்திருக்கிறது.

- **அணி நயம்:**

**"ஆண்மகனுக்கு பணி அழகு
கவி மகளுக்கு அணி அழகு"**

இப்பாடலில் அப்பா எனும் சொல் பலமுறை வந்து ஒரே பொருளைத் தருவதால **"சொற் பொருள் பின்வருநிலையணி"** பயின்று வந்துள்ளது.

- **சுவை நயம் :**

**" அரசனுக்கு அவை அழகு
கவிதைக்கு சுவை அழகு"**

இப்பாடலில் சாதி கொடுமையை சாடி பாடியுள்ளதால் **'வெகுளிச்சுவை'** பயின்றுவந்துள்ளது.

- **முடிவுரை:**

தமிழ் கவிஞர்கள் அருமைமிகு உணர்வுகளை சுவைமிகு கவிதையாக படைத்தளித்தமையால்தான்

www.Padasalai.Net

இன்றளவும் தமிழ் கன்னித்தமிழாகத் திகழ்கிறது.

42. **பாடாண் திணையை விளக்குக.**

**திணை:** ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்தக் கூறுவது பாடாண் திணையாகும்.

**எ.கா:** பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்?

**விளக்கம் :** பரிசில் பெற விழையும் இரவலர்க்கு அடைக்காத வாயிலோனே? விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, அவனை நம்பித்தான் உலகில் உள்ள வறியவர் உள்ளனர் எனக் கருதுகிறான் போலவும்.

**பொருத்**தம் : அரசனின் கொடைத்தன்மையை புகழ்ந்து பாடுவதால் இவ்வரிகள் பாடாண் திணைக்கு பொருத்தமாயிற்று.

ஆ)**பரிசில் துறை : பரிசு வேண்டி வாயிலில் நிற்ப**து.

**எ.கா:** பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்?

**விளக்கம் :** பரிசில் பெற விழையும் இரவலர்க்கு அடைக்காத வாயிலோனே? விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, அவனை நம்பித்தான் உலகில் உள்ள வறியவர் உள்ளனர் எனக் கருதுகிறான் போலவும்.

**பொருத்**தம் : அரசனின் கொடைத்தன்மையை புகழ்ந்து பாடுவதால் இவ்வரிகள் பரிசில் துறைக்கு பொருத்தமாயிற்று.

43. காது கேளாதோருக்கான மாற்று வினா

## பகுதி IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **3X6=18**

**44. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**முன்னுரை: "**நீடு துயில் நீக்க பாடிவந்த நிலா" " பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட செய்தவர்".

ஆம்! இப்புகழுக்கு உரியவர் நம் மகாவி பாரதி ஆவார். கடிதம் எழுதும் எவரும் தேவையைத் தாண்டி வேறெதுவும் எழுதமாட்டார். ஆனால் பாரதியின் கடிதத்திலோ, தேவையானது தனக்காக இல்லாமல் நாட்டிற்காக இருந்தது என்பதனை இக்கடிதத்தின் வாயிலாக நம்மால் நன்கு உணர முடிகிறது.

**நெல்லையப்பருக்கு:**

☐ தன் உடன் பிறந்த தம்பிக்கு எழுதும் உரிமையை இக்கடிதம் உணர்த்துகிறது.
☐ அவருக்கு பராசக்கி துணை இருப்பாள் என்ற வாழ்த்துதலுடன் தொடங்குகிறது பாரதியின் கடிதம்.
☐ நெல்லையப்பருக்கு பல மொழி அறிவு இருப்பது ஒருவகையில் நன்மைதான். ஏனென்றால், அம்மொழியில்
வெளிவந்த செய்திகளை தமிழர்க்கு உணர்த்த உதவியாக இருக்கும் என்று பாரதி தன் கடிதத்தில் கூறியிருக்கிறார்.,
☐ எந்தமொழி அறிந்திருந்தாலும் அது தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும் உதவியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவரின் மொழி பற்றினைக் காட்டுகிறது.
☐ நெல்லையப்பரிடம் தன் மனதில் தமிழ்நாடு வாழ்க என்னும் உறுதியை ஏற்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். நாட்டில் உள்ள ஆணும் பெண்ணும் ஓர் உயிர் ஈறுடல் போன்று கருத வேண்டும் என்று கூறியிருக்கும் கருத்தில், மனிதர்களை எவ்வளவு நேசித்திருக்கிறார் என்பது நமக்கு தெளிவாக தெரிகிறது.
☐ நாட்டில் தொழில், வணிகம், கலைகள் இவையெல்லாம் கிளைக்கிளையாய் வளர்ந்து தமிழ்நாடே உலகிற்கு எடுத்துக்காட்டான ஒரு வள நாடாகத்திகழ வேண்டும் என்று பாரதியார் விரும்பி இருக்கிறார்.

**முடிவுரை:** ஒரு சிறு கடிதத்தில் ஒவ்வொரு வரியும், வார்த்தையும் அவரின் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் மனித நேசிப்பையும் எவ்வாறு பறைசாற்றி நிற்கின்றன என்பதை நம்மால் நன்கு உணர முடிகிறது.

44. ஆ) **செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

**முன்னுரை:**

உலகப்பொதுமறை என்று போற்றுதலுக்கு உரிய திருக்குறள், எக்காலத்திற்கும், எந்நாட்டவருக்கும், எம்மக்களுக்கும் ஏற்றவகையில் அறிவுரை கூறும் அற நூலாக திகழ்கிறது. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' எனப்போற்றப்படும் வள்ளுவன் செய்ந்நன்றி மறவாமைக் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கும் கருத்தினை பின்வருமாறு காண்போம்.

**நன்றியின் அளவு:**

- நாம் பிறர்க்கு எந்த உதவியும் செய்யாதிருந்த பொழுது, பிறர் நமக்கு ஒரு உதவி செய்திருந்தால் அவ்வுதவி இந்த மண்ணுலகையும், விண்ணுலகையும் விட பெரியதாகும்.
- தக்க சமயத்தில் ஒரு செய்த சிறிய உதவி ஆனாலும், அது தகுந்த நேரத்தில் செய்யப்பட்டதால் அவ்வுதவி உலகத்தைவிட மிகப்பெரியதாகும்.
- எவ்வித பயனையும் ஆராயாமல் ஒருவர் செய்த உதவியின் பயனை நாம் ஆய்ந்து பார்த்தால் அது கடலைவிட பெரிதாகும்.
- ஒருவர் தினை அளவே உதவி செய்திருந்தாரும், அதன் பயனை அடைந்தவர் பனை அளவு உயர்வாக கருதவர்.

**நன்றி மறவாமை:**

- ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று: அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லதாகும்.
- எந்த அறத்தை அழித்தவருக்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கிறது. ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டவருக்கு உய்வே இல்லை.

**முடிவுரை:**

- இவ்வாறு பிறர் செய்த நன்றியை மறக்கக் கூடாது என மனிதர்களுக்கு வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

45. அ) **'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?**

**முன்னுரை:**

வாழ்வை முழுமையாக்கும் கூறுகளுள் முதன்மையானது பயணம். அதிலும் சாலைவழிப் பயணம் மனதிற்கு இன்பத்தை அளிக்கக் கூடியது. அத்தகைய பயணத்தை அனைவரும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும். சாலை விதிகளை நாம் கடைபிடிக்கவேண்டும். பிறரையும் கடைபிடிக்கச்செய்யவேண்டும். விபத்தில்லா தமிழ்நாட்டை உருவாக்குவது நம் ஒவ்வொருவர் கடமை ஆகும்.

**சாலை விபத்தில் தமிழ்நாடு:**

- நாளொன்றிற்கு 1317 விபத்துகள் நிகழ்கின்றன. இதில் 413 பேர் உயிரிழக்கிறார்கள்.
- குறிப்பாகத் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது.
- இந்தியாவில் நடக்கும் விபத்துகளின் மொத்த விழுக்காட்டில் தமிழ்நாடு 15 விழுக்காடுகளைப் பெறுகிறது.

**சாலை விபத்து ஏற்படும் வாகனங்கள்:**

- நம் நாட்டில் ஏற்படும் விபத்துகளில் 35 விழுக்காடு இருசக்கர ஊர்தியால் மட்டுமே ஏற்படுகின்றன.
- இதற்கு காரணம் ஓட்டுநர் உரிமம் பெற இயலாத 18 வயதிற்கும் குறைவான மாணவர்கள் ஓட்டுவதாலும்,
- கைபேசியுடன் பேசிக்கொண்டே செல்வதாலும் ஆகும்.

**விபத்தில்லாத் தமிழ் நாடு உருவாக:**

- கட்டாயம் தலைகவசம் அணிதல் வேண்டும்.
- சாலை விதிகளையும், குறியீடுகளையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.
- வண்டி ஓட்டும் போது கவனம் சாலையில் இருத்தல் வேண்டும்.
- நிதானம் வேண்டும். அதிக வேகத்தை தவிர்த்தல் வேண்டும்.
- சட்டத்தை மதித்தல் வேண்டும்.
- ஓடும் பேருந்தில் ஏறவோ, படிக்கட்டில் பயணிக்கவோ கூடாது.
- கைபேசியில் பேசிக்கொண்டோ, மது அருந்திவிட்டோ வாகனம் இயக்கக் கூடாது.
- நடை மேடை, நடைப்பாதையை பயன்படுத்துதல் கூடாது.
- சாலையின் வகைகள், மேடு பள்ளங்கள், குறுகல்கள், வேகத்தடை, விபத்து பகுதி, வளைவுகளை அறிந்து சீராக வாகனத்தை இயக்குதல் வேண்டும்.
- விபத்து குறித்த விழிப்புணர்வை மக்களிடம் பரப்புதல் வேண்டும்.

**முடிவுரை:**

☐ அருமை மிக்க உயிரை அகால மரணத்திற்கு அள்ளி தருவது முறையோ? குறைவில்லா வாழ்க்கையை உடல் ஊனக்குறைக்கு இரையாக்குவது தகுமோ? சிந்திப்பீர் ! சீராக பயணிப்பீர். பாதையில் பாதுகாப்பு பயணம். பயமில்லா பயணம்.

45.ஆ) **சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.**

☐ கரூரை அடுத்த புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, சங்ககால மக்களின் வரலாற்றை அறிய இயலுகிறது.

**கல்வெட்டு செய்திகளாவன.**

☐ கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் என்ற தொடர் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்டிருந்தன. மேலும், பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ, இளங்கோ என்ற பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

**கல்வெட்டில் உள்ள முழு வரிகள்**

" அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன
பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ(இ)ளங்கோ ஆக அறுத்த கல்" என்பதே ஆகும்.

☐ இது கருவூரில் இருந்து ஆட்சி செயத் சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்தது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்க நூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள்.

☐ இக்கல்வெட்டு ஏறத்தாழ இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதை நாம் ஐராவதம் மகாதேவன் அவர்கள் தம் கல்வெட்டு ஆராய்ச்சி மூலம் நமக்கு கூறி இருக்கிறார்.

46. அ) **கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.**

☐ இன்று உலகத்தில் தாய் தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளும் உள்ளனர். பிள்ளைகள் இல்லாத முதியவர்களும் உள்ளனர்.

☐ அவர்களை ஏற்று அரவணைத்து மனித நேயம் மிக்கவர்களை காண்பது அரிதாகதான் உள்ளது.

☐ இக்கதையில் வரும் வயதான பெரியவரின் மருமளும், மகனும் இறந்துவிட, அவர்கள் பெற்ற குழந்தையை அனாதையாக்க விரும்பாத தாத்தா, தள்ளாத வயதிலும் அக்குழந்தைக்காக வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்.

☐ தனக்கு பிறகு இக்குழந்தையை பாரத்துக்கொள்பவர்கள் யார்? தன்னுடைய உயிரை இனி எத்தனை ஆண்டுகள் பிடித்துக்கொண்டு வாழ இயலும் என கவலைக்கொள்கிறார்.

☐ குழந்தைக்கு காய்ச்சல். மருத்துவ மனைக்கு அழைத்து சென்ற போது குழந்தையின் அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் அவர் தவித்த தவிப்பு பெரும் வலி ஆகும்.

☐ குழந்தைக்கு ஊசி போடட் நர்ஸ், துணைக்கு யாரும் வரவில்லையா? என்று இவரின் வயது முதிர்வால் கை நடுக்கத்தைப்பார்த்து கூறியதைக்கேட்டு சிந்திக்கிறார்.

☐ வாடிக்கையாக மருந்து வாங்கும் மருந்த கநண்பர், இக்குழந்தையை தத்து கேட்கிறார்கள் என்று என்றோ கூறி இருந்தார்.

☐ தாத்தா, அதை அன்று மறுத்திருந்தாலும், இன்று அவரிடம், பல முறை யோசித்தேன். எனக்கு பிறகு இக்குழந்தை அனாதை ஆவதை விரும்பவில்லை. அவர்களின் விருப்பப்படி இக்குழந்தையை தத்து கொடுக்குகிறேன் என்று கூறினார்.

☐ இரவெல்லாம் உறக்கம் இல்லாமல் தவித்தாலும், குழந்தையின் நன்மை கருதி இது சரியே என அவர் மனம் ஒப்புக்கொண்டது.

☐ மறுநாள் குழந்தையை தத்து பெற வந்த தம்பதியர், நன்றி தெரிவிப்பதால், இந்த உபகாரத்திற்கு, ஈடாகாது என பெருந்தன்மையாக கூறியானர்கள்.

☐ அதுமட்டுமல்லாமல், குழந்தைக்கும் தன் இருவருக்கும் ஆதரவாக இருக்கும் தன்னுடனே வரும்படியும் தாத்தாவை அழைத்தார்கள்.

☐ தாத்தாவிற்கு மகிழ்ச்சியால் அடக்கி வைத்திருந்த கண்ணீர், ஆனந்த கண்ணீராய் துளிர்த்தது.

**நிறைவுரை :**

சுயநலத்திற்கு தனக்கு குழந்தை இன்மையால் குழந்தையை தத்தெடுக்கும் தம்பதிகள் எத்தனையோ பேர ளஇருக்கையில், குழந்தையும் முதியவரையும் தத்தெடுத்த மனிதநேயம் மிக்கவர்கள் ஒரு சிலரே உள்ளனர்.

இது போன்ற கதையின் வாயிலாக நாமாமும் மனிதம் பெற்று புனிதம் பெறுவோம்.

46. ஆ) கொடைப் பண்பை வலியுறுத்தி நாடகம் தன் சொந்த படைப்பில் எழுதியிருந்தால் மதிப்பெண்

வழங்கலாம்.

பகுதி

47. அடி பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

அ) விண்வேறு விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு
மண்வேறு மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு பனித்துளியும் மழையும் வேறு
புண்வேறு வீரர்களின் விழுப்புண் வேறு
புகழ்வேறு செல்வாக்கு வேறு காணும்
கண்வேறு கல்விக்கண் வேறு கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு
சுரதா

ஆ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

www.Padasalai.Net